**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 94/2008**
**U/s.** 406,465,468,471,420 r/w 34 **IPC**
**PROSECUTION WITNESS NO. (LW. )**

| | |
|---|---|
| **Name** : பத்மநாபன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

எதிரி ஆஜர்.
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.94 /2008 06.08.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்:**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் துணை காவல் கண்காணிப்பாளராக இருந்து 2010 ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். காவல் ஆய்வாளர் திரு. மெய்ஞானம் அவர்கள் இறந்துவிட்டார் . அவர்களது கையெழுத்து நன்கு பரிட்சியம் என்பதால் நான் அவரது சார்பாகவும், ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண் 1 , கடித எண் 34/2007 , 05.01.2007 ன் படி கிடைத்த காவல் துணை கண்காணிப்பாள்ர மேல்வரைவு தபாலின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி புகாதாரர் ராஜம் கொடுத்த புகாரினை பரிசீலனை செய்து , உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணியம் அவர்கள் 10.01.2007 ம் தேதி புகாரினை பெற்று, விசாரணை செய்துள்ளார். பின்பு 24.01.2007 ம் தேதி காவல் துணை கண்காணிப்பாளர் மாவட்ட குற்றபிரிவு வாதி ராஜம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . **முதல் தகவல் அறிக்கை அசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாருடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் 1. தஞ்சை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற EP.No. 245/1996 in OS.No. 523/1986 ன் பிரகாரம் A.B. மோகன் என்பவருக்கு வழக்கில் தொடர்புடைய சொத்தினை உறுதி செய்து 24.04.2000 அன்று பிறபித்த Court auction 28.03.2007 சான்றிட்ட நகல் அசாஆ 12, 2. மேற்படி Court auction மூலம் தமது சுவாதினத்திற்கு வந்த சொத்தினை A.B. மோகன் தஞ்சை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் EP.No. 129/1993 in , 138/2001 OS.No. 523/1986 ன் படி 18.12.2000 ன்படி தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுவின் 15.03.2007 ன் உண்மை நகல் அசாஆ13, 3. A.B. மோகன் தனது சிறப்பு பெற்ற முகவராக முத்தையன் த/பெ ராஜாங்கம் என்பவரை 15.11.2002 அன்று நியமித்து தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல்**

நீதிமன்றத்தில் 13.01.2003 ல் வழங்கிய சிறப்பு அதிகாரம் பெற்ற முகவர் 15.03.2007 ன் உண்மை நகல் அசாஆ 14, 4. தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் EP.No. 129/1996 in OS.No. 523/1986 தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற ஊழியர் சீனியர் பெயிலிப் திரு. ராஜேந்திரன் உத்தரவை நிறைவேற்றி 25.04.2003 ம் தேதி அன்று நிறைவேற்றிய ஜப்தி ஆவணத்தின் உண்மை நகல் அசாஆ 15, 5. எதிரி கலியபெருமாள் வழக்கில் தொடர்புடைய சொத்தினை தனது மனைவி தேவி 29.12.2003 அன்று பதிவு செய்த தான செட்டில்மெண்ட் பத்திரம் எண் 4585/03 உண்மை நகல் அசாஆ 16 6. 2 வது எதிரி A.B. மோகனின் சிறப்பு பெற்ற முகவராக முத்தையன் உருத்து கட்டளை கோரி தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No. 226/2006 ன்படி 11.07.2006 அன்று தாக்கல் செய்த மனு உண்மை நகல் அசாஆ 17, 7. சிறப்பு பெற்ற முகவராக முத்தையன் , 2 வது எதிரி OS.No. 226/2006 ன்படி தொடுத்த வழக்கிலிருந்து தன்னை விடுவித்து கொள்ள கோரி தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் IA No. 618/2006 in OS.No. 226/2006 ன்படி24.07.2006 தாக்கல் செய்த மனுவின் உண்மை நகல் அசாஆ 18, 8. 2 வது எதிரி தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முத்தையா மீது OS.No. 226/2006 ன்படி தாக்கல் செய்த வழக்கு 24.07.2006 ல் தள்ளுபடி ஆனது தொடர்பான தீர்ப்புரை நகல் அசாஆ 19, 9 . மேற்படிசொத்தின் 1 வது எதிரி கலியபெருமாள் பெயரிலிருந்த பட்டா எண் 11/54 யை சாட்சி 2 A.B. மோகன் பெயருக்கு மாற்றி தஞ்சாவூர் மண்டல துணை வட்டாசியர் செயலமுறைகள் ந.க. 17438/2006/ ஆ8, நாள் 20.07.2006 தேதியிட்ட ஆணையின் உண்மை நகல் அசாஆ 20, 11. மேற்படி சொத்திற்கு 1997–1998 ம் ஆண்டு முதல் 2006–2007 ஆண்டு வரை புதுப்பட்டினம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வீட்டு வரியாக 26.07.2006 டஅன்று மொத்தம் ரூ. 726 /– செலுத்தியதற்கான வீட்டு வரி ரசீது எண் 157736 22.03.2007 ம் தேதியிட்ட சான்றிட்ட நகல் அசாஆ 21, 12 . தஞ்சை தாலுக்கா– புதுபட்டினம் கோரிகுளம் , அம்பலகாரத்தெரு , பழைய கதவு எண் 254, புதிய கதவு எண் 01/434 ல் கண்டுள்ள புல எண் , பழைய சர்வே எண் 33/1 (புதிய சர்வே எண் 33/1 F) புஞ்சை மனை ஸ்தலம் உள்ள கூரை வீடு எண் புதியது 1/434( பழைய எண் 254 ) 1 வது எதிரியை 25.04.2003 ல் நீதிமன்ற உத்தரவின் படி வெளியேற்றி இடத்தை கையகப்படுத்திய பின்னரும் அதில் 1 வது எதிரி வசித்து வருகிறார் என்பதற்கான கிராம நிர்வாக அலுவலர் திரு. ராஜேந்திரன் என்பவரின் சான்றிதழ் ( அசல்– 05.08.2008 ம் தேதி அசாஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வாதி ராஜம் என்பவரை விசாரித்து வாக்குமூலம்

பதிவுசெய்துள்ளார் . பின்பு 22.01.2007 ம் தேதி காலை 10.00 மணியளவில் மாவட்ட குற்றபிரிவு தஞ்சாவூர் குற்ற எண் 02/2007 பிரிவு 420 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் .

**2.** பின்பு 24.01.2008 ம் தேதி காலை 10.00 மணியளவில் வழக்கினை உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணியன் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு , சம்பவயிடமான தஞ்சை தாலுக்கா– புதுபட்டினம் கோரிகுளம் , அம்பலகாரத்தெரு , பழைய கதவு எண் 254, புதிய கதவு எண் 01/434 ல் கண்டுள்ள புல எண் , பழைய சர்வே எண் 33/1 (புதிய சர்வே எண் 33/1 F) சம்பவயிட சாட்சிகள் முருகானந்தம் , வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளார் . **பார்வை மகசர் அசாஆ 23 , மாதிரி வரைப்படம் அசாஆ 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** பின்பு இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் உதவி ஆய்வாளர் அவ்ரகள் 1,2 எதிரிகள் தஞ்சாவூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் CRLMP No. 364/2008 29.01.2008 ல் முன்ஜாமீனில் சென்றுள்ளதால் , அவர்களை கைது செய்ய இயலவில்லை. 3 வது எதிரி முத்தையன் பூதலூர் அய்யானபுரத்தில் அவரது வீட்டில் வைத்து 22.03.2008 ம்தேதி கைது செய்யப்பட்டுள்ளார் .

4. பின்பு 24.01.2007 ம் தேதி காவல் துணை கண்காணிப்பாளர் மாவட்ட குற்றபிரிவு வாதி ராஜம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . பின்பு 24.01.2008 ம்தேதி வாதி ராஜம் , பசா2 மோகன் , குமார் , முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் சீனியர் பெயிலிப் திரு. ராஜேந்திரன், ஆரோக்யசாமி , முத்துலெட்சுமி , கலியமூர்த்தி, ஆறுமுகம் , பழனிவேல் , ரவிச்சந்திரன், நெடுஞ்செழியன், மாவட்ட பதிவாளர் (முத்திரை ) அலுவலகம் , இணை சார் பதிவாளர் I திரு. குரு. சிவாஜி , கிராம நி்ரவாக அலுவலர் திரு. ராஜேந்திரன் , தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் திருமதி. கலையரசி , தமிழ்நாடு மின்சார வாரியம் உதவி செயற்பொறியாளர் திரு. திருமாவளவன் , முருகானந்தம் , வெங்கடேசன் ஆகியோரை உதவி ஆய்வாளர் திரு. சுப்ரமணியம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் .

**5.** பின்பு வழக்கினை எனது மேல்கட்ட விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் சாட்சி பசா –5 துரைராஜ் , பசா –6 துரைக்கண்ணு, பசா –7 இருதயராஜ், பசா –8 மைக்கேல் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி பட்டியல் சாட்சி 1 ராஜம் என்பவரை விசாரித்தபோது அவர் காவல் துணை கண்காணிப்பாளர் , உதவி ஆய்வாளர் ஆகியோரிடம் கூறிய தகவலையே கூறியதால் நான் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவிலலை. பசா 11 லிருந்து 22

வரையுள்ள சாட்சிகள் உதவி ஆய்வாளர் அவரகளிடம் கூறிய தகவலையே கூறியதால் நான் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவிலலை. பின்பு நான் பணி ஓய்வு பெற்றதால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

6. பின்பு வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட திரு. மெய்ஞானம் அவர்கள் பட்டியல் சாட்சிளான பசா2 மோகன் , பசா –3 குமார் , பசா– 4 ராஜேந்திரன், பசா 9 ஆரோக்ய சாமி, பசா 10 வீரமணி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்த கொண்ட காவல் ஆய்வாளர் திரு. மெய்ஞானம் அவர்கள் மேற்படி எதிரிகள் மீது தஞ்சாவூர் மாவட்ட குற்றபிரிவு குற்ற எண் 2/2007 சட்டபிரிவு 406,465,468,471,420IPC r/w 120(b) இதசன் படி குற்றபத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞருக்கு போதிய அவகாசம் அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.